நாள்: 04.03.2026.
O.S. No.22/2022
பெயர்: முஜிப்பூர் ரகுமான்  , த/பெ. அப்துல் ரகீம்
வா.சா.2

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நான் 8–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞருக்கு யார் விபரம் கூறினார்கள் என்றால் நான் தான் விபரம் கூறினேன். வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் வழக்கு சொத்தின் அளவில் சரிசெய்ய கோரியுள்ளார். புல எண்.182/13 என்ற சொத்தின் மொத்த அளவு என்னவென்றால் அது எங்கள் சொத்து இல்லை ஆனால் அதன் அளவு 6 1/2 ஏர்ஸ் ஆகும். எதை வைத்து அதன் அளவை கூறுகிறேன் என்றால் 2012–ம் ஆண்டு அந்த சொத்தை வாங்குவதற்கு முன்பு அளந்து பார்த்ததன் மூலம் தெரியும். அளக்கும் போது நீள அகலத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன் 12 1/2 மீட்டர் முன்னும் பின்னும் அளவுடைய சொத்தாகும். புல எண்.182/14 என்ற சொத்தின் மொத்த அளவு என்னவென்றால் 6 1/2 ஏர்ஸ் ஆகும். அது யாருக்கு சொந்தமான சொத்து என்றால் எனது அப்பா அப்துல் ரகீம் என்பவருக்கு சொந்தமான சொத்து ஆகும். எனது அப்பாவிற்கு மற்ற சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. எங்கு உள்ளது என்றால் அவருக்கு 6 சொத்துக்கள். அந்த 6 சொத்துக்களும் ஒரே ஊரில் உள்ளதா வெவ்வேறு ஊரில் உள்ளதா என்றால் ஒரு சொத்து மட்டும் ஒரு ஊரிலும் மற்ற சொத்துக்கள் வேறு ஊரிலும் உள்ளது. அந்த சொத்துக்கள் எனது தந்தையாரால் சுயமாக சம்பாத்திய சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்துக்களுக்கு ஆவணங்கள் உண்டு என்றால் சரிதான். அந்த சொத்துக்களுக்கு உண்டான ஆவணங்கள் இந்த வழக்கில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. புல எண்.182/14 தொடர்புடைய ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். பட்டாவை தவிர புல எண்.182/14 என்ற சொத்திற்கு வேறு ஆவணங்கள் உண்டா என்றால் உண்டு. அந்த ஆவணங்கள் எங்கு

உள்ளது என்றால் வீட்டில் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் என்ன வென்றால் குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை. எனது தகப்பனார் கிரயம் வாங்கியதற்காக பத்திரம் உள்ளதா என்றால் உள்ளது. எனது தாயார் தற்போது உயிருடன் இல்லை. எனது உடன்பிறந்தவர்களின் பெயர்கள் என்னவென்றால் நஜிபுதீன், அப்துல்காதர், முகம்மது சாதிக், முகம்மது ஜெகபர், தர்ஜாத் நிஷா ஆவார்கள். புல எண்.182/13 ல் உள்ள சொத்து பிரதிவாதிக்கு உரிமை என்றாலும் அது பொறுத்து நான் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல, எனது சொத்து பிரதிவாதியிடமும், பிரதிவாதியின் சொத்து என்னிடமும் உள்ளது. பிரதிவாதியின் சொத்து என்னிடம் உள்ளதில் அளவீடு என்னவென்றால் 342 சதுரடி ஆகும். தாவா சொத்து எந்த திசையில் உள்ளது என்றால் வடக்கு திசையில் உள்ளது. நானும், பிரதிவாதியும் சொத்துக்களை பரிமாற்றம் செய்துகொண்டதற்கு ஆவணங்கள் உண்டா என்றால் இல்லை வாய்மொழியாக தான் பரிமாற்றம் செய்து கொண்டோம். அவ்வாறு வாய்மொழியாக பரிமாற்றம் செய்துகொண்டதாக வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை அவ்வாறு கூறாமல் தற்போது பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புல எண்.182/13 ன் பழைய புல எண்.182/6A2 என்றாலும், புல எண்.182/14–ன் பழைய புல எண்.182/6B என்றாலும் சரிதான். எனது உடன்பிறந்த சகோதர சகோதரிகளை இவ்வழக்கில் சேர்க்காததற்கு காரணம் என்னவென்றால் அவர்கள் எனக்கு சொத்தினை கொடுத்துவிட்டதால் அவர்களை இவ்வழக்கில் நான் சேர்க்கவில்லை. நான் பிரதிவாதியிடம் எவ்வித சொத்தையும் வாய்மொழியாக பரிமாற்றம் செய்யவில்லை என்றாலும், இவ்வழக்கில் நான் எனது உடன் பிறந்தவர்களை சேர்த்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால் அவர்களை சேர்க்காமல் தவிர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல, அவர்கள் எனக்கு சொத்துக்களை 2014–ம் ஆண்டு எழுதிக்கொடுத்ததால் அவர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. அவ்வாறு எழுதிக்கொடுத்ததற்கான

ஆவணங்களை இவ்வழக்கில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் அவசியம் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை. புல எண்.182/13 தொடர்பாக பிரதிவாதிக்கு எதிராக எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்கத்தக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. புல எண்.182/14 சொத்து தொடர்பான பரிகாரங்களுக்கு எனது உடன்பிறந்தோர்களை வழக்கில் சேர்க்காததால் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எழுதி வைத்ததாக கூறப்படும் செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் நான் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. நிலங்கள் பரிமாற்றம் செய்து கொண்டது தொடர்பாக ஊரில் பஞ்சாயத்து எந்த வருடம் நடந்தது என்றால் 2022-ம் வருடம்ட நடந்தது. அந்த பஞ்சாயத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் பிரதிவாதியும், அவருக்கு வேண்டியபட்டவர்களும் இருந்தார்கள். பஞ்சாயத்தில் இடத்தை திருப்பி கொடுக்க வேண்டுமென்றும் இல்லையென்றால் எனது வீட்டை இடிக்க வேண்டியிருக்கும் என்று கூறினார்கள். நான் எனது சொத்தை ஆக்கிரமித்துள்ளேன் என்றால் 342 சதுரடி நிலமாகும். பிரதிவாதி எனது சொத்தில் எவ்வளவு ஆக்கிரமித்துள்ளார் என்றால் 342 சதுரடி நிலத்தையும், இரண்டு தென்னை மரத்தையும் நான் எனது சித்தப்பா மூலம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளேன். அந்த தென்னை மரம் தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது பெயரிலும் எனது மனைவி பெயரிலும் நன்னிலம் காவல் நிலையத்தில் குற்ற எண்.260/2022 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் நான் இந்த பிரதிவாதிக்கு கொடுத்த சொத்தை வைத்துக்கொண்டு பிரதிவாதியிடம் கொடுக்க வேண்டிய சொத்தை தராமல் ஏமாற்றி தகராறு செய்ததாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. என் மீது என்ன குற்றம் சுமத்தி வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் பிரதிவாதி அழைத்து வந்த ஆட்களை நான் மிரட்டியதாகவும் மின் பெட்டியை சேதப்படுத்தியதாகவும் புகார்

அளித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது. நான் சொல்வது போல் பிரதிவாதி புகார் கொடுக்கவில்லை என்றாலும் நானும், பிரதிவாதியும் செய்துகொண்ட சமரச உடன்படிக்கைக்கு மாறாக பரிமாற்றம் செய்துகொண்ட சொத்துக்களில் பிரதிவாதியை அனுமதிக்காமல் வேலி அமைத்ததாக புகார் அளித்தார் என்றால் சரியல்ல. எனது தந்தை தாவா சொத்து புல எண்.182/14 ல் உள்ள சொத்தை சையது புகாரி மற்றும் அப்துல் மஜீத் என்பவரிடமிருந்து கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். அவ்வாறு கிரயம் பெற்றதற்கான ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.